2019 ஜூலை 12]

முற்பகல் 11–50

(இ) காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், செம்போடையில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குதல், 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற்பிரிவுகள் உருவாக்குதல் உள்ளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. பொதுத் துறை நிறுவனங்களான பவர்கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் சமூக பங்களிப்புடன் காஞ்சிபுரம் மாவட்டம்–பெரும்பாக்கம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம்–செம்போடை ஆகிய இரண்டு இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 26 கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இளைஞர்கள், வேலைவாய்ப்பு அதிகமுள்ள தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற ஏதுவாக, அம்பத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, கடலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், சேலம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நீண்டகால மற்றும் குறுகிய கால புதிய தொழிற்பிரிவுகள் 44.19 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பெரும்பாலானவர்கள் ஏழை, எளிய மாணவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் சுயதொழில் செய்வதை ஊக்கப்படுத்திடும் நோக்கில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 14 சுய வேலைவாய்ப்பு தொழிற்பிரிவுகளில் ஆண்டுதோறும் வெற்றிகரமாக பயிற்சி முடித்துச் செல்லும் 10,000 நபர்களுக்கு அவரவர் தொழிற்பிரிவிற்கு ஏற்ப 7.50 கோடி ரூபாய் செலவில் கருவித் தொகுப்புகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சிவகங்கை, நாமக்கல், காரைக்குடி, திண்டுக்கல் (மகளிர்), தூத்துக்குடி, சேலம் (மகளிர்), மதுரை (மகளிர்), தருமபுரி, புதுக்கோட்டை, புள்ளம்பாடி (மகளிர்), நாகலாபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு உணவுடன்கூடிய தங்கும் விடுதிகள் 64.41 கோடி ரூபாய் செலவில் புதிதாக ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)